தமிழ் முரசு



ஆயுத பூஜையையொட்டி கரூர் சீனிவாசபுரத்தில் உள்ள பொரிக்கடையில் பொரி தயாரித்து மூட்டை கட்டும் தொழிலாளர்கள்.

போதை மாபியாவை வைத்துக்கொண்டுதான்

தவெக தலைவர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தாரா ?

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி

சென்னை, அக். 17-

சொந்தக் கட்சியிலேயே மிகப் பெரிய போதை மாபியாவை வைத்துக்கொண்டுதான் த.வெ.க. தலைவர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தாரா? என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு: 'டிவிகே = பேட் பார்ட்டி' மட்டுமல்ல, 'பிரேக்கிங் பேட் பார்ட்டி', ஒன்றிய அரசின் டிஆர்ஐ அதிகாரிகளால் நாகை மாவட்டத் த.வெ.க. நிர்வாகியும் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் பொறுப்பாளருமான பூபாலன் கைது செய்யப்பட்டுள்ளார். போதை 'ஒழிப்பு' பற்றி முதலமைச்சர் மேடைதோறும் பாடமெடுத்து வருவதை, போதை 'ஒளிப்பு' எனத் தவறாகப் புரிந்துகொண்டு 135 கிலோ மெத்தம்பெட்டமைன் போதைப் பொருளை ஒளித்து வைத்திருந்ததுதான் அவர் செய்துள்ள குற்றம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



கேரியரின் உச்சத்தில் இருந்தபோது தொக்காக மாட்டியுள்ளார். சொந்தக் கட்சியிலேயே மிகப் பெரிய போதை மாபியாவை வைத்துக்கொண்டுதான் த.வெ.க. தலைவர் ஊருக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தாரா? ஒரே சோதனையில் இந்த அளவுக்கு போதைப்பொருள் சிக்கியிருக்கிறதென்றால், இவர்களின் பின்னால் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் எனக் கண்டறிந்து மொத்த Network-ஐயும் சுற்றி வளைக்க வேண்டும். தாசில்தார் மூலமாகக் கம்யூனிஸ்டுகளைக் கணக்கெடுப்பதற்கு பதிலாக, மாவட்டத்துக்கு மாவட்டம் இப்படி எத்தனை லியோதாஸ்களும், பவுடர் சரத்களும் த.வெ.க.வில் இருக்கிறார்கள் என முதலில் கணக்கெடுங்கள். ஆட்சிக்கு வந்த ஐந்தே மாதங்களில் 'பேட் பார்ட்டி' என்று பெயரெடுத்திருந்த த.வெ.க., அடுத்தகட்டமாக 'பிரேக்கிங் பேட் பார்ட்டி'-யாக பிரமோசன் பெற்றுள்ளது. \"பயமா இருக்கா? போக போக இன்னும் பயங்கரமா இருக்கும்\" என முதலமைச்சர் இதற்கும் 'பஞ்ச் டயலாக்' அடிக்காமல் இருக்க வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

காடையாம்பட்டியில் கனமழை

மரத்தின் அடியில் நின்றிருந்த தொழிலாளி மின்னல் தாக்கி பலி

காடையாம்பட்டி, அக்.17-

காடையாம்பட்டி அருகே கனமழையின் போது மின்னல் தாக்கி தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்தார்.

சேலம் மாவட்டம் காடையாம்பட்டி அருகே உள்ள டேனிஷ்பேட்டை, பொட்டியபுரம், சக்கர செட்டிபட்டி,தும்பிப்பாடி, ஓமலூர், தின்னப்பட்டி மற்றும் சுற்றுவட்டார பகுதியில், நேற்று மாலை இடி-மின்னலுடன் கனமழை பெய்தது. டேனிஷ் பேட்டை பகுதியில் பலத்த இடி-மின்னலுடன் மழை பெய்தபோது, அங்குள்ள பஸ் நிறுத்தத்தில் உள்ள புளியமரத்தின் அடியில் மழைக்காக ஒருவர் ஒதுங்கி நின்றிருந்தார். அப்போது, திடீரென அவர் மீது மின்னல் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்த தகவலின் பேரில், தீவட்டிப்பட்டி இன்ஸ்பெக்டர் பெரியசாமி மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக, ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



மின்னல் தாக்கி இறந்த சரவணன்

தொடர் விசாரணையில், மின்னல் தாக்கி இறந்தவர், மேச்சேரி அரங்கனூர் பகுதியை சேர்ந்த சரவணன் (37) என்பது தெரிய வந்தது. இவருக்கு மனைவி மற்றும் இரண்டு மகன்கள், ஒரு மகள் உள்ளனர். காடையாம்பட்டி ஆண்டிகொட்டாய் பகுதியில் உள்ள மாமியார் வீட்டிற்கு வந்திருந்த சரவணன், பஸ் சுக்காக டேனிஷ்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் வந்த போது, திடீரென மழை பெய்ததால் புளியமரத்தின் அடியில் ஒதுங்கினார். அப்போது, மின்னல் தாக்கியதில் அவர் இறந்தது தெரிய வந்தது.

மேலும், காடையாம்பட்டி பகுதியில் இடி-மின்னலுடன் பலத்த மழை பெய்ததால், அந்த பகுதியில் உள்ள பல வீடுகளில் டிவி, பிரிட்ஜ் உள்ளிட்டவை வெடித்து பழுதானது.

இசையமைப்பாளர் தேவா திடீர் மரணம்

சென்னை, அக். 17-

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராக திகழ்ந்தவர் தேவா(75). ரஜினி நடித்த பாட்ஷா, அருணாசலம், அண்ணாமலை, அஜித் நடித்த ஆசை உள்பட பல்வேறு தமிழ்படங்களுக்கு தேவா இசை அமைத்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்பட 400க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசையமைத்துள்ளார். இவர் பல கானா பாடல்களையும் பாடியுள்ளார். தேனிசை தென்றல் என ரசிகர்களால் அழைக்கப்பட்டவர்.



இவருக்கு இன்று உடல் நலகுறைவு ஏற்பட்டது. இதையடுத்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார். அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மாரடைப்பால் அவர் இறந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து தேவா உடல் மயிலாப்பூரில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டது. அங்கு ரசிகர்கள் அவரது உடலுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இவரது மகன் ஸ்ரீகாந்த்தும் இசை அமைப்பாளர் ஆவார்.

6 நாட்களாக மாயம்

சிறுமியை கண்டுபிடித்தால் ரூ.2 லட்சம் சன்மானம்

செஞ்சி, அக். 17-

விழுப்புரம் அருகே மாயமான சிறுமியை கண்டுபிடிக்க முடியாமல் போலீசார் திணறி வருகின்றனர். இந்நிலையில் மாயமான சிறுமியை கண்டுபிடித்தால் ரூ.2 லட்சம் சன்மானம் தருவதாக தவெக நிர்வாகி அறிவித்துள்ளார். இதுதொடர்பாக போஸ்டர்களும் ஒட்டப்பட்டுள்ளன.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியை அடுத்த நடுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த வடிவேல் - பவானி தம்பதியரின் 2வது மகள் ஹேமலதா (7).

2ம் வகுப்பு மாணவியான இவர் கடந்த 11ம்தேதி இரவு பிறந்தநாள் கொண்டாடிவிட்டு தனது பெற்றோருடன் வீட்டில் படுத்திருந்த நிலையில் மாயமானார். இதுதொடர்பாக வடிவேல் அளித்த புகாரின்பேரில் போலீசார் வழக்குபதிந்து விசாரணை நடத்தினர். மாயமான 7 வயது சிறுமி ஹேலதா குறித்து இன்றோடு 6 நாட்களாகியும் எந்தவித துப்பு கிடைக்காமல் போலீசார் திணறி வருகின்றனர்.

மொத்தம் 8 தனிப்படைகள் விசாரணை நடத்தி வரும் நிலையில், மாயமான சிறுமியை கண்டுபிடித்து தருவோருக்கு ரூ.2 லட்சம் சன்மானம் தரப்படும் என தவெக நிர்வாகி அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக செஞ்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் தவெக விழுப்புரம் வடமேற்கு மாவட்ட செயலாளர் குண.சரவணன் தரப்பில் பரபரப்பு போஸ்டர் ஒட்டப்பட்டுள்ளது. முன்னதாக மாயமான சிறுமியின் பெற்றோரை சந்தித்து அவர் ஆறுதல் கூறினார்.

தவெக நிர்வாகி அறிவிப்பு



"வீட்டிலேயே பாதுகாப்பில்லை"

இதனிடையே இவ்விவகாரம் தொடர்பாக மயிலம் தொகுதி அதிமுக எம்எல்ஏ சிவி சண்முகம் கூறியதாவது: சிறுமி ஹேமலதா மாயமான சம்பவம் விழுப்புரம் மாவட்டத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு முன்பு வரை பொதுவெளியில்தான் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருந்தது. தற்போது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த சிறுமி மாயமாகி இருப்பது அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதை போக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது. மாயமான சிறுமிக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் அவரை உயிருடன் மீட்க வேண்டும் என்றார்.

அருமனை அருகே நிலத்தகராறில்

ஆயுதப்படை போலீசுக்கு அரிவாள் வெட்டு

அருமனை, அக். 17-

கன்னியாகுமரி மாவட்டம் அருமனை அருகே உள்ள சிதறால் வாதுக்கா விளை பகுதியை சேர்ந்தவர் ஷாஜி குமார் (46). நாகர்கோவில் ஆயுதப்படையில் காவலராக பணிபுரிந்து வருகிறார்.

இவருக்கு அருமனை வள்ளி சிறக்குளம் அருகே நிலம் உள்ளது. அந்த நிலத்துக்கு முள்வேலி அமைப்பதற்காக சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த அவரது மாமன் மகன் சுரேஷ், அவரது மகன் ஆகியோர், ஷாஜி குமாருடன் தகராறில் ஈடுபட்டு உள்ளனர்.

இதில் ஆத்திரம் அடைந்த அவர்கள், மறைத்து வைத்திருந்த அரிவாளால், காவலர் ஷாஜி குமாரை சரமாரியாக வெட்டி உள்ளனர். இதில் படுகாயம் அடைந்த அவரை உறவினர்கள் மீட்டு, அருமனை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். இதுகுறித்து அருமனை காவல்நிலையத்தில் புகார் செய்யப்பட்டது. அதன் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஆயுதப்படை போலீசை அரிவாளால் வெட்டும் காட்சி தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

செட்டிகுளத்தில்

டூவீலரிலிருந்து தவறி விழுந்தவர் சாவு

பாடாலூர், அக். 17-

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா செட்டிகுளத்தை சேர்ந்தவர் ஜெயபிரகாஷ் (47). எலக்ட்ரீசியன். இவர் கடந்த 11ம் தேதி காலை ஆலத்தூர்கேட்டில் இருந்து செட்டிகுளம் நோக்கி பைக்கில் சென்றார். செட்டிகுளம் சங்கிலி பிள்ளையார் கோயில் அருகே வந்தபோது எதிர்பாராதவிதமாக நிலைதடுமாறி பைக்கில் இருந்து கீழே விழுந்தார். இதில் தலையில் படுகாயமடைந்த அவர் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனையிலும், பின்னர் மேல் சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி ஜெயபிரகாஷ் இன்று பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து பாடாலூர் போலீசார் வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

முதாட்டியை கொன்று நகை கொள்ளை

தென்காசி, அக்.17-

தென்காசி மாவட்டம் கடையம் அருகேயுள்ள ராமச்சந்திரபுரம் பகுதியைச் சேர்ந்தவர் பழனிச்சாமி. இவரது மனைவி ஜானகி பாப்பா (82). இவரது வளர்ப்பு மகன் சிவா என்பவருக்கு திருமணம் ஆகிவிட்டது. தற்போது வீட்டில் வேலை நடைபெறுவதால் அவரது மனைவி அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார். இந்நிலையில் நேற்று தனியாக இருந்த ஜானகி பாப்பாவை மர்ம நபர்கள் வீடு புகுந்து அவரை தலையில் தாக்கி கொலை செய்துள்ளனர். மேலும் அவர் அணிந்திருந்த 50 கிராம் தங்க செயின் உள்ளிட்ட நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் மாலை 7 மணி அளவில் தனது தாயை சந்திக்க சிவா வந்துள்ளார். அப்போது ஜானகி பாப்பா கொலை செய்யப்பட்டு கிடந்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மூதாட்டியின் சடலத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

கேரளாவுக்கு கடத்த முயன்ற 3 டன் ரேஷன் அரிசி பறிமுதல்

கம்பம், அக். 17-

கம்பத்தில் இருந்து கம்பம்மெட்டு வழியாக கேரளாவுக்கு கடத்த முயன்ற 3 டன் ரேஷன் அரிசியை போலீசார் பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக 2 பேரை கைது செய்தனர்; தப்பியோடிய ஒருவரைத் தேடி வருகின்றனர்.

தேனி மாவட்டம், கம்பத்தில் இருந்து மெட்டு வழியாக கேரளாவுக்கு ரேஷன் அரிசி கடத்தப்படுவதாக உத்தமபாளையம் குடிமைப்பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதை தொடர்ந்து கம்பம் வடக்கு போலீசாருடன் இணைந்து கம்பம்மெட்டு மலைச்சாலையில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

2 பேர் கைது: ஒருவருக்கு வலை



அப்போது 16வது வளைவு சாலையில் சந்தேகத்துக்கிடமாக வந்த வாகனத்தை நிறுத்தினர். போலீசாரைப் பார்த்ததும் வாகனத்தில் இருந்த ஒருவர் குதித்து தப்பியோடினார்; 2 பேர் பிடிபட்டனர். வாகனத்தை சோதனை செய்ததில் சட்டவிரோதமாக 50 சிப்பங்களில் சுமார் 3 டன் ரேஷன் அரிசி கேரளாவுக்குக் கடத்த கொண்டு வந்தது தெரிய வந்தது. பிடிபட்டவர்கள் உத்தமபாளையத்தைச் சேர்ந்த தர்மராஜ், மகேந்திரன் ஆகியோர் என தெரிய வந்தது. இது குறித்து போலீசார் வழக்குப்பதிந்து இருவரையும் கைது செய்தனர். ரேஷன் அரிசியை பறிமுதல் செய்தனர். மேலும், வாகனத்தில் இருந்து குதித்து தப்பியோடியவரை தேடி வருகின்றனர். பறிமுதல் செய்யப்பட்ட 3 டன் ரேஷன் அரிசியை உத்தமபாளையம் உணவுப்பொருள் கிட்டங்கியில் அதிகாரிகள் ஒப்படைத்தனர்.

கனம் முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்
G.W.O.P.No.50/2026
(இளவல் U.அப்சானா, வயது 14 அவர்களின் சொத்தை விற்பனை செய்ய அனுமதி கோருதல் சம்பந்தமாக

U.அப்துல் உசேன்,
த/பெ.லேட்.A.உஸ்மான்,
கதவு எண்.18B, ஐ.பி.கோவில் மேலத்தெரு, விஜயபுரம், திருவாரூர் நகரம், திருவாரூர் தாலுகா, திருவாரூர் மாவட்டம்.
-மனுதார்

எதிர்

Nil
-எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுவில் உள்ள இளவல் U.அப்சானா என்பவருக்கு மனுதார் தான் தனிநபர் மற்றும் சொத்து காப்பாளராக தன்னை நியமிக்கக்கோரி மனுதார் மேற்படி மனுவை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இதில் வேறு எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் சமூகம் நீதிமன்றத்தில் 14.11.2026ம்தேதி காலை 10.00 மணிக்கு ஆஜராகி தங்கள் ஆட்சேபனைகளை தெரிவிக்க வேண்டியது.

நீதிமன்ற உத்தரவுப்படி

A.ஞானியார், B.A., B.L.,
வழக்கறிஞர், திருநெல்வேலி.

அக்டோபர் 17, 2026 சனிக்கிழமை

பாதுகாப்பு கேள்விக்குறி

இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையமான டிராய், கடந்த 2024ம் ஆண்டு பிப். 23ம் தேதி தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை தொடர்பாக சில முக்கியப் பரிந்துரைகளை ஒன்றிய அரசுக்கு வழங்கியது. அதனை ஏற்றுக்கொண்ட தொலைத்தொடர்புத் துறை, வரும் நவ. 1ம் தேதி முதல் அனைத்து செல்போன்களின் திரையிலும் அழைப்பவரின் பெயர் கட்டாயம் இடம் பெற வேண்டும் என்ற அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளது. ஏர்டெல், ஜியோ, வோடபோன் ஐடியா உள்ளிட்ட முன்னணி நிறுவனங்கள் தங்களது நவீன வலைப்பின்னல்களில் இதற்கான சோதனைகளை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்றும் திட்டவட்டமாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய உத்தரவின் அடிப்படையில், உள்நாட்டிலிருந்து வரும் அனைத்து அழைப்புகளின் போதும் அழைப்பவரின் தொலைபேசி எண்ணுடன் அரசு ஆவணங்களில் பதிவு செய்யப்பட்ட அதிகாரப்பூர்வ பெயரும் திரையில் தோன்றும். ஒருவர் தனது செல்போனில் குறிப்பிட்ட எண்ணைச் சேமித்து வைத்திருக்காவிட்டாலும் கூட, சிம் கார்டு வாங்கும் போது தொலைத்தொடர்பு நிறுவனப் பதிவுகளில் அளிக்கப்பட்டுள்ள உண்மையான பெயரே எதிர்முனையில் இருப்பவருக்கு வெளிச்சத்திற்கு வந்துவிடும். 4ஜி மற்றும் மேம்பட்ட அலைவரிசைகளில் உடனடியாக அமலுக்கு வரும் இந்த திட்டம், எதிர்காலத்தில் 2ஜி, 3ஜி மற்றும் தரைவழித் தொலைபேசி இணைப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளுக்குத் திரையில் 'சர்வதேச அழைப்பு' என்று மட்டும் காட்டப்படும்.

ஒன்றிய அரசின் இந்த முடிவு மோசடி அழைப்புகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், சாமானிய வாடிக்கையாளர்களுக்கு இது கடுமையான பின்னடைவையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியுள்ளது. டெலிவரி ஊழியர்கள், வர்த்தக நிறுவனங்கள், வாடகை வாகன ஓட்டுநர்கள் போன்ற மூன்றாம் நபர்களுக்குப் பெண்கள் தங்களின் செல்போன் மூலம் அவசரத் தேவைக்கு அழைக்கும் போது, அவர்களின் உண்மைப் பெயர் உடனே தெரிந்துவிடும் ஆபத்து நிலவுகிறது. இது பெண்களுக்கு எதிரான பின்தொடர்தல், அச்சுறுத்தல் மற்றும் புதிய சைபர் குற்றங்களுக்குக் கதவை அகலத் திறந்துவிடும் கொடுஞ்செயலாக மாறிவிடும். போலி ஆவணங்கள் மூலம் சிம் கார்டுகளைப் பெறும் உண்மையான கிரிமினல்களும் மோசடி பேர்வழிகளும் இந்த விதியிலிருந்து மாற்று வழிகளில் தப்பித்துவிட வாய்ப்புள்ள நிலையில், அப்பாவி மக்களே இதனால் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள்.

இந்த வசதியைத் தவிர்க்க விரும்பும் வாடிக்கையாளர்கள் தங்களது தொலைபேசி எண்ணை மறைக்கும் 'சிஎல்ஐஆர்' அமைப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று தொலைத்தொடர்புத் துறை விதிவிலக்கு அளித்துள்ளது. எனினும், இத்தகைய தொழில்நுட்ப நடைமுறை நாட்டின் 100 கோடிக்கும் அதிகமான சாதாரண பாமர மக்களுக்குச் சென்று சேருமா என்பதும், அதனை எளிதாகச் செயல்படுத்த முடியுமா என்பதும் பெரும் புதிராகவே நீடிக்கிறது. மேலும், நிறுவனங்கள் பராமரிக்கும் வாடிக்கையாளர் தரவுத்தளங்களில் ஏதேனும் தவறுகள் அல்லது பெயர்க் குழப்பங்கள் ஏற்பட்டால், அதற்கான புகார்களைத் தீர்க்கத் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அமைக்கும் முறைகள் எவ்வளவு தூரம் பயனுள்ளதாக இருக்கும் என்ற கேள்வியும் எழுகிறது. எனவே, அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த பெயர் காட்டும் திட்டத்தைக் கட்டாயமாக்குவதைத் தவிர்த்து, பயனாளர்கள் விரும்பினால் மட்டுமே தங்களின் பெயரை வெளிப்படுத்தும் விருப்பத் தேர்வாக இதனை மாற்ற வேண்டும். பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கு எவ்வித ஊறும் விளைவிக்காத வகையில் இந்த விவகாரத்தில் அரசு உரிய திருத்தங்களை மேற்கொள்வதே தற்போதைய அவசியத் தேவையாகும்.

Truhome FINANCE

ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்)

தலைமை அலுவலகம்: நிலை-3, வோக்ஹார்ட்ட் டவர்ஸ், கிழக்கு விங் C-2, G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கிழக்கு), மும்பை 400 051; **தொலைபேசி:** 1800 102 4345; **இணையதளம்:**http://www.truhomefinance.in

பதிவு அலுவலகம்:ஸ்ரீநிவாசா டவர், முதல் தளம், கதவு எண்.5, பழைய எண்.11, 2வது லேன், சௌடாப் சாலை, ஆழ்வார்பேட்டை,தேனாம்பேட்டை, சென்னை-600 018

பிற்சேர்க்கை-IV-A [விதி 8(6) விதிமுறையை காண்க] அசையாச் சொத்துகள் விற்பனைக்கான ஏல அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுமக்களுக்குப் பொதுவாக மேலும் கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் ஆகியோருக்குக் குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது **ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட்)** வசம் அடமானம்/உரிமை அளிக்கப்பட்ட, **ட்ரூஹோம் நிதி லிமிடெட்டின்** அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும், கீழே விவரிக்கப்பட்ட அசையாச் சொத்துகள் ஆனது, அட்டவணையில் குறிப்பிட்டவாறு, கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் வசமிருந்து பாக்கி நிலுவைத்தொகையை மீட்பதற்காக **"உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் 02/11/2026 அன்று காலை 11:00 மணி முதல் காலை 11:30 மணிக்குள் மின்-ஏலத்தில்** விற்பனை செய்யப்படவுள்ளது. கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள், நிலுவைத்தொகை, அசையாச் சொத்தின் குறு விவரம், நிர்ணய விலை மற்றும் முன்வைப்புத்தொகை மற்றும் பார்வையிடும் தேதி ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர்கள்/உப-கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள் பெயர்	மீட்புத் தொகை மற்றும் கோரிக்கை அறிவிப்பின் தேதி	நிர்ணய விலை (ரூ.) & ஏலம் உயர்த்தும் தொகை	ஏலத் தேதி & நேரம்	தொடர்பு நபர் விவரங்கள் - (AO மற்றும் அகற்றல் குழு)
திரு. விவேக் **எண்.39, பெருமண்டி தெற்கு தெரு, பாலக்கரை மெயின் ரோடு, மேலக்காவேரி கும்பகோணம் - 612002** **திரு. ரவி** **எண்.39, பெருமண்டி தெற்கு தெரு, பாலக்கரை மெயின் ரோடு, மேலக்காவேரி கும்பகோணம் - 612002** **திருமதி. கீதா க/பெ. திரு. ரவி** **எண்.39, பெருமண்டி தெற்கு தெரு, பாலக்கரை மெயின் ரோடு, மேலக்காவேரி கும்பகோணம் - 612002** **சுவாதீனம் நாள் & வகை** 21.11.2025 மற்றும் கையக சுவாதீனம் **தெரிந்த வில்லங்கங்கள்** தெரிந்தது இல்லை	கோரிக்கை அறிவிப்பு தேதி: 10-02-2025 ரூ. 2,73,826/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து எண்ணூற்று இருபத்தி ஆறு மட்டும்) 07-02-2025 தேதியன்று கடன் கணக்கு எண். SELHKMBM0000390 இன் தொடர்பாக. & ரூ. 23,20,836/- (ரூபாய் இருபத்து மூன்று லட்சத்து இருபதாயிரத்து எண்ணூற்று முப்பத்தி ஆறு மட்டும்) 07-02-2025 தேதியன்று கடன் கணக்கு எண். SLPHKMBM0000375 இன் தொடர்பாக.	ரூ.21,00,000/-(ரூபாய் இருபத்தி ஒன்று லட்சம் மட்டும்) **ஏலம் உயர்த்தும் தொகை:** ரூ.10,000/-மற்றும் அதன் மடங்குகளில் **முன்வைப்புத்தொகை (EMD)(ரூ.)** ரூ. 2,10,000/- (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)**முன்வைப்புத்தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி:31/10/2026 நேரம் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை.**	02-நவம்பர் 2026 & ஏல நேரம்: காலை 11.00 மணி முதல் காலை 11.30 மணி வரை	திரு. S. ஜேம்ஸ் கிளமெண்ட் 7200281906 திரு. M.செல்வகுமார் 9444224367 திரு. சுமன் 9597191507 சொத்து பார்வையிடும் நாள் : 30/10/2026 & காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை

சொத்து விவரம்

அனைத்து துண்டு மற்றும் பகுதி தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகரம், கும்பகோணம் SRO, வார்டு எண்.7 T.S எண்.2207/7-ல் சொத்து அமைந்துள்ளது. நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: மேற்கு: பாதை, வடக்கு: கார்த்திக் நிலம், தெற்கு: சுப்பிரமணியன் நிலம், கிழக்கு: சீனிவாசன் நிலம். சொத்தின் மொத்த பரப்பளவு 852 ½ சதுர அடி ஆகும். அனைத்து எளிதான வசதிகள் மற்றும் பாதை உரிமைகளுடன்.

1) விற்பனை தொடர்பான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, ட்ரூஹோம் நிதி லிமிடெட்டின் இணையதள லிங்க்: https://www.truhomefinance.in/e-auction/ மற்றும் ஏல சேவை வழங்குநரின் இணையதள முகவரி: https://www.bankeauctions.com ஐ பார்வையிடவும்.
2) ஏலத்தில் பங்கேற்கும் ஏலதாரர்கள் தங்கள் முன்வைப்புத்தொகையை RTGS/NEFT மூலம் டொபாசிட் செய்ய இங்கே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு விவரங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும்: வங்கி பெயர்: ஆக்சிஸ் வங்கி லிமிடெட், கிளை: பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், மும்பை வங்கி கணக்கு எண். நடப்புக் கணக்கு எண். 911020045677633 IFSC குறியீடு: UTIB0000230.

இடம்: கும்பகோணம்
நாள்: 17-10-2026

ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி-ட்ரூஹோம் நிதி லிமிடெட் (முன்பு ஸ்ரீராம் வீட்டு வசதி நிதி லிமிடெட் என அறியப்பட்டது)

Printed & Published by Mr.D.Karthikeyan, on behalf of M/s Kal Publications Pvt. Ltd. and Printed at Dinakaran Press, S.F.No.42\8B, Trichy-Dindigul Main Road, Ramji Nagar Post, Trichy-620009 and Published at S.F.No.42/8B, Trichy-Dindigul Main Road, Ramji Nagar Post, Trichy-620009.
Editor Mr.D.Karthikeyan. RNI Regn. No. 68292/98. Phone: 0431-4467676. E-Mail:trydinakaran@gmail.com